# QB365 Question Bank Software Study Material

## புவியியல் - இந்தியா - காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) 'ஜெட் காற்றோட்டங்கள்' என்றால் என்ன?

**பதில் :** 1. வளிமண்டத்தின் உயர் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகள் "ஜெட் காற்றுகள்" எனப்படும்.
2. ஜெட் காற்றோட்ட கோட்பாட்டின் படி, உப அயன மேலை காற்றோட்டம் வடபெரும் சமவெளிகளிலிருந்து திபெத்திய பீடபூமியை நோக்கி இடம் பெயர்வதால் தென்மேற்குப் பருவக்காற்று உருவாகின்றது.
3. கீழை ஜெட் காற்றோட்டங்கள் தென்மேற்கு மற்றும் பின்னடையும் பருவக்காற்றுக் காலங்களில் வெப்ப மண்டல தாழ்வழுத்தங்களை உருவாக்குகின்றன.

2) பருவக் காற்று குறித்து ஒரு சிறு குறிப்பு எழுதுக

**பதில் :** 1. பருவங்களுக்கேற்றவாறு தங்களது திசைகளை மாற்றிக்கொண்டு வீசும் கோள் காற்றுகளைப் பருவக்காற்று என்கிறோம்.
2. இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் மிக முக்கியமான காரணி பருவக்காற்றாகும்.
3. இக்காற்று கோடைக் காலத்தில் தென்மேற்கு திசையிலிருந்து வடகிழக்கை நோக்கியும், குளிர்காலத்தில் வடகிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு நோக்கியும் வீசுகிறது.
4. இந்தியாவிற்கு மழைப்பொழிவினைத் தரும் பருவக்காற்றுகள், தெள்மேற்குப் பருவக்காற்று மற்றும் வடகிழக்குப் பருவக் காற்று என்பனவாகும்.

3) இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக.

**பதில் :** 1. குளிர்க்காலம் - ஜனவரி முதல் பிப்ரவரி வரை.
2. கோடைக்காலம் - மார்ச் முதல் மே வரை
3. தென்மேற்கு பருவக்காற்று காலம்  - ஜூன் முதல் செப்டம்பர் வரை.
4. வடகிழக்கு பருவக்காற்று காலம் - அக்டோபர் முதல் டிசம்பர் வரை.

4) 'பருவமழை வெடிப்பு' என்றால் என்ன?

**பதில் :** 1. தென்மேற்கு பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் (தென்னிந்தியாவில்) 'பருவமழை வெடிப்பு' எனப்படுகிறது.
2. இக்காற்று இந்தியாவின் தென் முனையை அடையும் பொழுது இரண்டு கிளைகளாகப் பிரிகிறது.

5) அதிக மழைப்பெறும் பகுதிகளைக் குறிப்பிடுக

**பதில் :** 1. மேற்கு கடற்கரை
2. அசாம்
3. மேகாலயாவின் தென்பகுதி
4. நாகலாந்து
5. திரிபுரா
6. அருணாச்சலப்பிரதேசம்

6) இந்தியாவில் சதுப்புநிலக் காடுகள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.

**பதில் :** 1. கங்கை, பிரம்மபுத்திரா டெல்டா பகுதிகள் (உலகின் மிகப்பெரிய சதுப்பு நிலக் காடுகள்)
2. மகாநதி, கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளின் டெல்டா பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன.

7) இந்தியாவில் உள்ள உயிர்கோள காப்பகங்கள் ஏதேனும் ஐந்திணை எழுதுக.

**பதில் :** 1. மன்னார் வளைகுடா - தமிழ்நாடு
2. நீலகிரி - தமிழ்நாடு
3. அகத்திய மலை - கேரளா

4. கட்ச் - குஜராத்
5. சுந்தரவனம் - மேற்குவங்காளம்

8) காலநிலையை பாதிக்கும் பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக.

**பதில் :** 1. அட்சப் பரவல்
2. கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு
3. கடல் மட்டத்திலிருந்து உயரம்
4. பருவக்காற்று
5. நிலத்தோற்றம்
6. ஜெட் காற்றுகள்

9) "வெப்ப குறைவு விகிதம்" என்றால் என்ன?

**பதில் :** புவிப்பரப்பிலிருந்து உயரே செல்ல செல்ல வளிமண்டலத்தில் ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் 6.5°C என்ற அளவில் வெப்ப நிலை குறைகிறது. இதற்கு “வெப்ப குறைவு விகிதம்" என்று பெயர்.

10) 'புலிகள் பாதுகாப்புத் திட்டம்' என்றால் என்ன?

**பதில் :** 1. "புலிகள் பாதுகாப்புத் திட்டம்" இந்தியாவில் 1973 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
2. புலிகளை பாதுகாக்கவும் அதன் எண்ணிக்கையை அதிகரிக்கவும் புலிகள் பாதுகாப்பகங்கள் தொடங்கப்பட்டன.
3. இத்திட்டத்தின் மூலம் புலிகளின் எண்ணிக்கை 60 சதவீதம் உயர்ந்துள்ளது.

11) இயற்கைத் தாவரம் என்றால் என்ன?

**பதில் :** இயற்கைத் தாவரம் என்பது நேரடியாகவோ மறைமுகமாகவோ மனித உதவியில்லாமல் இயற்கையாக வளர்ந்துள்ள தாவர இனத்தை குறிக்கிறது.

12) இந்திய வனவிலங்கு வாரியம் பற்றி சிறுகுறிப்புத் தருக.

**பதில் :** 1952 ஆம் ஆண்டு வன விலங்குகள் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக் குறித்த பரிந்துரைகளை அரசாங்கத்திற்கு வழங்க நிறுவப்பட்ட அமைப்பு ஆகும்.

13) சமச்சீர் காலநிலை என்றால் என்ன?

**பதில் :** 1. சமச்சீர் காலநிலை என்பது 'பிரிட்டிஷ் காலநிலை" என்று அழைக்கப்படுகிறது.
2. இக்காலநிலை அதிக வெப்பமுடையதாகவோ அல்லது மிகக் குளிருடையதாகவோ இருக்காது.

14) வானிலை மற்றும் காலநிலை என்றால் என்ன?

**பதில் :** **வானிலை :**
வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள வளிமண்டலத்தின் தன்மையைக் குறிக்கும்.
**காலநிலை:**
காலநிலை என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியின் சுமார் 30-35 ஆண்டு சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.

15) "மாஞ்சாரல்" குறிப்பு வரைக.

**பதில் :** 1. வளிமண்டல அழுத்த நிலையின் வேறுபாட்டால் அரபிக்கடல் மற்றும் வங்கக் கடல் பகுதிகளில் காற்றானது தென்மேற்கிலிருந்து வடகிழக்கு நோக்கி வீசுகிறது.
2. இக்காற்றுகள் மே மாதத்தில் மேற்கு கடற்கரைப் பகுதிகளுக்கு முன்பருவகால மழையைத் தருகின்றன.
3. "மாஞ்சாரல்" என்ற இடியுடன் கூடிய மழையானது கேரளா மற்றும் கர்நாடக கடற்கரை பகுதிகளில் விளையும் "மாங்காய்கள்" விரைவில் முதிர்வதற்கு உதவுகிறது.

**5 மதிப்பெண் வினாக்கள்** 4 x 5 = 20

16) தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.

**பதில் : காலம்:**

இந்திய காலநிலையின் முக்கிய அம்சமான விளங்கும் தென்மேற்கு பருவக்காற்று காலம் ஜூன் முதல் செப்டம்பர் வரையாகும்.

**பருவக்காற்றின் துவக்கம்:**

1. இப்பருவக்காற்று பொதுவாக ஜுன் முதல் வாரத்தில் இந்தியாவின் தென்பகுதியில் தொடங்கி கொங்கணக் கடற்கரைக்கு ஜுன் இரண்டாம் வாரத்திலும், அனைத்து இந்தியப் பகுதிகளுக்கும் ஜுலை 15 லும் முன்னேறுகிறது.

2. இப்பருவக் காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் "பருவமழை வெடிப்பு" எனப்படுகிறது. இது இந்தியாவின் வெப்பநிலையை பெருமளவில் குறைக்கிறது.

3. இக்காற்று இந்தியாவின் தென்முனையை அடையும் பொழுது இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. அவை அரபிக்கடல் கிளை மற்றும் வங்காளவிரிகுடா கிளை என்பனவாகும்.

**அரபிக்கடல் கிளை;**

1. தென்மேற்கு பருவக்காற்றின் அரபிக்கடல் கிளை மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்குச் சரிவுகளில் மோதி பலத்த மழைப் பொழிவைப் தருகிறது.

2. இக்கிளையானது வடக்கு நோக்கி நகர்ந்து இமயமலையால் தடுக்கப்பட்டு வட இந்தியா முழுவதும் கனமழையைக் கொடுக்கிறது.

3. ஆரவல்லி மலைத் தொடர் இக்காற்று வீசும் திசைக்கு இணையாக அமைந்துள்ளதால் இராஜஸ்தான் மற்றும் வட இந்தியாவின் மேற்குப் பகுதிக்கு மழைப்பொழிவை தருவதில்லை.

**வங்காள விரிகுடா கிளை:**

1. வங்காள விரிகுடா கிளை, வடகிழக்கு இந்தியா மற்றும் மியான்மரை நோக்கி வீசுகிறது.

2. இது காசி, காரோ, ஜெயந்தியா குன்றுகளால் தடுக்கப்பட்டு மேகாலயாவில் உள்ள மௌசின்ராமில் மிக கனமழையைத் தருகிறது.

3. பிறகு இக்காற்று கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நகரும் போது மழைப்பொழிவின் அளவு குறைந்து கொண்டே செல்கிறது.

4. இந்தியாவின் ஒட்டுமொத்த மழைப்பொழிவில் 75% மழைப்பொழிவானது இப்பருவக்காற்று காலத்தில் கிடைக்கிறது.

5. தமிழ்நாடு மழை மறைவுப் பகுதியில் அமைந்துள்ளதால் குறைவான மழையைப் பெறுகிறது.

17) இந்திய காடுகள் பற்றி விவரிக்கவும்.

**பதில் : அயன மண்டல பசுமைமாறாக் காடுகள்:**

1. ஆண்டு மழைப்பொழிவு 200 செ.மீட்டருக்கும் மேலும் ஆண்டு வெப்பநிலை 22°C க்கு அதிகமாகவும் உள்ள பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன.

2. கேரளா, கர்நாடகா, மகாராஷ்ட்ரா, அந்தமான் நிக்கோபர் தீவுகள், அசாம், மேற்குவங்காளம், நாகலாந்து, திரிபுரா, மிசோரம், மணிப்பூர் மற்றும் மேகாலயா ஆகிய பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன.

3. இரப்பர், எபனி, ரோஸ்மரம், தென்னை, மூங்கில், சின்கோனா, சிடார் போன்ற மரங்கள் இங்கு காணப்படுகின்றன.

**அயன மண்டல இலையுதிர்க் காடுகள்:**

1. ஆண்டு சராசரி மழைப்பொழிவு சுமார் 100 செ.மீ முதல் 200 செ.மீ வரையுள்ள பகுதிகளில் இக்காடுகள் காணப்படுகின்றன.

2. இக்காடுகளிலுள்ள மரங்கள் வசந்த காலத்திலும் கோடைகாலத்தின் முற்பகுதியிலும் வறட்சியின் காரணமாக இலைகளை உதிர்த்து விடுகின்றன. எனவே இக்காடுகள் இலையுதிர்க் காடுகள் என அழைக்கப்படுகின்றன.

3. இமயமலைக்கு அருகில் உள்ள பஞ்சாப் முதல் அசாம் வரையிலான பகுதிகள் வடசமவெளிகள், மத்திய இந்தியா மற்றும் தென் இந்தியா போன்ற பகுதிகளில் இக்காடுகள் காணப்படுகின்றன.

4. தேக்கு, சால், சந்தனமரம், ரோஸ்மரம், குசம், மாகு, பாலாங், ஆம்லா, மூங்கில், சிசம் மற்றும் படாக் போன்ற பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மரங்கள் இக்காடுகளில் வளர்கின்றன.

**அயன மண்டல வறண்ட காடுகள்:**

1. ஆண்டு மழைப்பொழிவு 50 செ.மீ முதல் 100 செ.மீ வரை உள்ள பகுதிகளில் அயன மண்டல வறண்ட காடுகள் காணப்படுகின்றன. இவை ஒரு இடைநிலை வகைக் காடுகளாகும்.

2. இக்காடுகளில் இலுப்பை, ஆலமரம், பலா, மஞ்சக்கடம்பு, கருவேலம் மற்றும் மூங்கில் ஆகியவை முக்கிய மரவகைகளாகும்.

**முட்புதர் காடுகள்:**

1. பாலைவன மற்றும் அரைப் பாலைவனத் தாவரங்களை "முட்புதர் காடுகள்" என்றும் அழைப்பர்.

2. இவை ஆண்டு சராசரி மழைப்பொழிவு 50 செ.மீட்டருக்கு குறைவாகவும், அதிக வெப்பமும் குறைவான ஈரப்பதமும் கொண்ட பகுதிகளில் காணப்படுகின்றன.

3. கருவேல மரம், ஈச்சமரம் போன்ற மரங்கள் இக்காடுகளில் வளர்கின்றன.

**மலைக்காடுகள்:**

1. உயரம் மற்றும் மழையளவின் அடிப்படையில் இதனை பருவக்காற்று காடுகள் என்று அழைக்கலாம்.

2. கிழக்கு இமயமலைக் காடுகள், வட கிழக்கு இந்திய மாநிலங்களிலுள்ள இமயமலைச் சரிவுகளில் காணப்படுகின்றன. இவை 200 செ.மீட்டருக்கும் அதிகமான மழைப் பொழிவைப் பெறுகின்றன.

3. மேலும் இவை பசுமை மாறாக் காடுகள் வகையை சார்ந்தவை.

4. மேற்கு இமயமலைக்காடுகள் ஜம்மு-காஷ்மீர், இமாச்சல பிரதேசம், உத்ரகாண்ட் போன்ற மாநிலங்களில் மிதமான மழைப்பொழிவுள்ள பகுதிகளில் காணப்படுகின்றன.

**அல்பைன் காடுகள்:**

1. சுமார் 2400 மீட்டருக்கு மேல் உள்ள இமயமலைகளின் உயரமான பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன,

2. இவை ஊசியிலை மரங்களைக் கொண்டுள்ளன. கிழக்கு இமயமலைப் பகுதியில் இவ்வகையான காடுகள் பரந்த அளவில் உள்ளன.

**அலையாத்திக்காடுகள்:**

1. இக்காடுகள் டெல்டாக்கள், பொங்கு முகங்கள் மற்றும் கடற்கழிமுகப் பகுதிகளில் காணப்படுகின்றன.

2. இவை ஓதங்களின் ஆதிக்கத்திற்கு உள்ளாவதால் சதுப்பு நிலக்காடுகள் மற்றும் டெல்டா காடுகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

3. இவ்வகை ஓதக்காடுகள் 'மாங்குரோவ் காடுகள்' என்றும் அழைக்கப்படுகின்றன.

18) இந்தியாவில் உள்ள உயிர்க்கோள பெட்டகங்கள் மற்றும் அவைகளின் அமைவிடங்களை எழுதுக.

**பதில் :** இந்தியாவின் உயிர்கோள காப்பகங்கள்: இந்தியாவில் உள்ள 18 உயிர்க்கோள காப்பகங்களில் 11 காப்பகங்கள் (மன்னார் வளைகுடா, நந்தாதேவி, நீலகிரி, நாக்ரேக், பச்மாரி, சிம்லிபால், சுந்தரவணம், அகத்திய மலைபெரிய நிக்கோபார், கஞ்சன் ஜங்கா மற்றும் அமர்கண்டாக்) யுனெஸ்கோவின் (UNESCO) மனித மற்றும் உயிர்க்கோள காப்பக திட்டத்தின் கீழ் செயல்படுகின்றன.

| வ.எண் | உயிர்க்கோள காப்பகங்கள் | மாநிலம் |
|---|---|---|
| 1 | அச்சனக்மர்-அமர்கண்டாக் | மத்திய பிரதேசம் சத்தீஸ்கர் |
| 2 | அகத்தியமலை | கேரளா |
| 3 | திப்ரு செய்கொவா | அசாம் |
| 4 | திகேங் திபங் | அருணாச்சல பிரதேசம் |
| 5 | பெரிய நிக்கோபார் | அந்தமான் நிக்கோபார் தீவுகள் |
| 6 | மன்னர் வளைகுடா | தமிழ்நாடு |
| 7 | கட்ச் | குஜராத் |
| 8 | கஞ்சன்ஜங்கா | சிக்கிம் |
| 9 | மானாஸ் | அசாம் |
| 10 | நந்தா தேவி | உத்ரகாண்ட் |
| 11 | நீலகிரி | தமிழ்நாடு |
| 12 | நாக்ரெக் | மேகாலயா |
| 13 | பச்மாரி | மத்தியப் பிரதேசம் |
| 14 | சிம்லிபால் | ஒடிசா |
| 15 | சுந்தரவனம் | மேற்கு வங்காளம் |
| 16 | குளிர் பாலைவனம் | இமாச்சலப் பிரதேசம் |
| 17 | சேஷாலம் | ஆந்திரப் பிரதேசம் |
| 18 | பன்னா | மத்தியப் பிரதேசம் |

19) வடகிழக்குப் பருவக்காற்றினை விவரி.

**பதில் :** 1. வடகிழக்குப் பருவக்காற்று அக்டோபர் முதல் டிசம்பர் வரை வீசுகிறது.
2. செப்டம்பர் மாத இறுதியில் அழுத்த மண்டலமானது புவியின் தெற்குநோக்கி நகர ஆரம்பிப்பதால் தென்மேற்குப் பருவக்காற்று பின்னடையும் பருவக்காற்றாக நிலப்பகுதியிலிருந்து வங்காள விரிகுடா கடலை நோக்கி வீசுகிறது.
3. பூமி சுழல்வதால் ஏற்படும் விசையின் காரணமாக காற்றின் திசை மாற்றப்பட்டு வடகிழக்கிலிருந்து வீசுகிறது.
4. எனவே இக்காற்று வடகிழக்குப் பருவக்காற்று என அழைக்கப்படுகிறது.
5. இப்பருவக்காற்றின் மூலம் கேரளா, ஆந்திரா, தமிழ்நாடு மற்றும் தென் கர்நாடகாவின் உட்பகுதிகள் நல்ல மழைப்பொழிவைப் பெறுகின்றன.
6. இப்பகுதிகள் மொத்த மழைப்பொழிவில் 35 சதவீதத்தைப் பெறுகின்றன. வங்கக் கடலில் உருவாகும் புயலால் தமிழ்நாட்டின் பல பகுதிகளும் ஆந்திரா மற்றும் கர்நாடகாவின் சில பகுதிகளும் மழையைப் பெறுகின்றன.
7. கடற்கரைப் பிரதேசங்களில் கன மழையுடன் கூடிய பலத்த புயல்காற்று, பெரும் உயிர்ச்சேதத்தையும் பொருட்சேதத்தையும் ஏற்படுத்துகிறது.